**ஊடக அறிக்கை**

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நாணயத் திணைக்களம் |
| திகதி | 2022.03.21 |

## இலங்கை மத்திய வங்கி இலங்கையில் குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பீட்டின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதத்தில் சுற்றோட்ட நியமத்திலான ஞாபகார்த்த நாணயக்குற்றியினை வெளியிடுகிறது

இலங்கையில் குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பீட்டின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதத்தில் ரூ.20 முகப்புப் பெறுமதியுடன்கூடிய சுற்றோட்ட நியமத்திலான ஞாபகார்த்த நாணயக்குற்றியொன்றினை நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்த நிகழ்வினை அங்கீகரிக்கின்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கி வெளியிடுகிறது. இந்நாணயக்குற்றியானது இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கோரிக்கைக்கிணங்க வெளியிடப்படுகிறது.

இலங்கையில் முதலாவது குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 1871இல் நடத்தப்பட்டதுடன் 2021ஆம் ஆண்டு 150ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது. 15 ஆவது குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பீட்டினை 2021இல் அதன் ஆண்டு நிறைவுடன் சேர்த்து நடத்துவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 15 ஆவது குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பீடு 2022 - 2023 வரை பிற்போடப்பட்டிருக்கிறது.

| முன்பக்கம் | பின்பக்கம் |
|---|---|
|   |   |
| குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு இலச்சனை நாணயக்குற்றியின் மத்தியில் பொறிக்கப்பட்டுள்ளது. “150” என்ற இலக்கம் பெரிய இலக்கங்களிலும் 1871 - 2021 சிறிய இலக்கங்களிலும் இலச்சனைக்குக் கீழே காணப்படுகின்றன. “குடிசன வீட்டுவசதிகள் தொகைமதிப்பு” என்ற சொற்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழில் நாணயத்தின் விளிம்பு ஓரமாகக் காணப்படுகின்றன. | முகப்புப் பெறுமதியான “20” பெரிய இலக்கங்களில் “இருபது ரூபாய்” என்ற சொல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் காணப்படுவதுடன் ஆண்டு “2021” சொற்களுக்கு சற்று கீழே காணப்படுகிறது.<br><br>“இலங்கை” என்ற சொல் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் நாணயக்குற்றியின் மேல் விளிம்பு ஓரத்தில் காணப்படுகிறது. |

| விபரங்களும் உற்பத்திக் குறிப்புக்களும் | | | |
|---|---|---|---|
| குற்றி மீதான ஆண்டு | 2021 | வார்ப்படம் | 2,000,000 குற்றிகள் |
| உலோகம் | நிக்கல் பூசப்பட்ட உருக்கு | வடிவம் | ஏழு கோணம் |
| குற்றியின் வகை | சுற்றோட்ட நியம ஞாபகார்த்தம் | ஓரம் | தட்டை |
| விட்டம் | 28 மிமீ | தடிப்பு | 2 மிமீ |

முதலாவது நாணயக்குற்றி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மாண்புமிகு அஜித் நிவாட் கப்ரால் அவர்கள் மற்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் திரு. பி. எம். பி அனுரகுமார ஆகியோரின் பங்கேற்புடன் 2022.03.21 அன்று இலங்கையின் அதிமேதகு சனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கு சனாதிபதி செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.



நாணயக்குற்றியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளூடாக சுற்றோட்டத்திற்கு விடப்படவுள்ளதுடன், இது, ஏற்கனவே சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்கள் மற்றும் குற்றிகளுடன் சேர்த்து கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தப்படும்.

| மேலதிகத் தகவல்களுக்கு தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் | தொலைபேசி | தொலைநகல் |
|---|---|---|
| நாணயக் கண்காணிப்பாளர் | +94 11 247 7587 | +94 11 247 7726 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | +94 11 247 7152 | +94 11 247 7701 |
| மின்னஞ்சல் | currency@cbsl.lk | |

நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01